# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் தேதி, செவ்வாய்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆவணி மாதம் 01 ஆம் நாள்
CC No.87/2018
(CNR No: TNAL070004922018)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>விக்கிரமங்கலம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 06/2018. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | வடிவேல் (40/2026), த/பெ.இராமலிங்கம்,<br>மேலத்தெரு, வாழைக்குறிச்சி. |

<table>
<tr><td>1</td><td>குற்றம் சாட்டப்பட்டது</td><td>:</td><td colspan="2">எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ்</td></tr>
<tr><td>2</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்டது</td><td>:</td><td colspan="2">எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழ்</td></tr>
<tr><td>3</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td>:</td><td colspan="2">06.01.2018</td></tr>
<tr><td>4</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="2">07.01.2018</td></tr>
<tr><td rowspan="2">5</td><td rowspan="2">எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள்</td><td rowspan="2">:</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>07.01.2018</td><td>12.01.2018</td></tr>
<tr><td>6</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="2">24.07.2018</td></tr>
<tr><td>7</td><td>கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச் சாட்டு வனைந்து வினவப் பட்ட நாள்</td><td>:</td><td colspan="2">06.09.2019</td></tr>
<tr><td>8</td><td>கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td>:</td><td colspan="2">1) அரசு தரப்பில் தரப்பில் U/s.311 Cr.P.C ன் கீழ் 14.07.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.05/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 27.05.2025 | 01.06.2026 |
| | | | அ.சா.2 | 21.05.2026 | 21.05.2026 |
| | | | அ.சா.3 | 21.05.2026 | 21.05.2026 |
| | | | அ.சா.4 | 21.05.2026 | 21.05.2026 |
| | | | அ.சா.5 | 01.06.2026 | 01.06.2026 |
| | | | அ.சா.6 | 24.06.2026 | 24.06.2026 |
| | | | அ.சா.7 | 14.07.2026 | 14.07.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 20.07.2026 | | |

இவ்வழக்கு கடந்த 25.07.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 18.08.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஸ்ரீனிவாசராகவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கின் புகார்தாரருக்கு எதிரிக்கும் பொழி பிரச்சனை இருந்த நிலையில் புகார்தாரரின் ஆட்டுக்குட்டி, எதிரியின் வீட்டின் முன்பு போனபோது எதிரியின் மகன் ஆட்டுக்குட்டியை அடித்துள்ளார் என்றும், புகார்தாரர் ஏன் அடித்தாய் என்று கேட்டதற்கு எதிரி புகார்தாரரை தேவிடியா, குச்சிகாரி என அசிங்கமான வார்த்தைகள் சொல்லி திட்டி அருகில் கிடந்த உருட்டு கட்டையால் புகார்தாரரின் தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும், கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்துள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் அதனை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படியும், வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-**

7. அ.சா.1 கோவிந்தம்மாள் தனது சாட்சியத்தில் தனக்கும் எதிரி வீட்டிற்கும் பொய் பிரச்சனை காரணமாக முன் விரோதம் இருந்து வந்தது என்றும், தனது ஆட்டுக்குட்டி அவர் வீட்டின் முன் சென்றதால் எதிரியின் மகன் ராஜீ என்பவர் அடித்து விட்டார் ஏன் அடித்தார் என்று கேட்டதற்கு என்னடி குச்சிகாரி தேவிடியா என்றும் உனது தாலியை அறுத்துவிடுவேன் என அசிங்கமாக திட்டினார் என்றும், வடிவேலு ஒரு குச்சியை எடுத்து தன் தலையில் அடித்தார், தனது இடது புற இடுப்பிலும் அடித்தார் என்றும், பிறகு தனது கணவர் தன்னை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், பிறகு மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர் என்றும், ஜெயங்கொண்டம்

அரசு மருத்துவமனையில் போலீசார் தன்னிடம் இருந்து புகாரினை பெற்றுக்கொண்டார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 சுதா தனது சாட்சியத்தில் 2018 ம் வருடம் ஒருநாள், மாலை சுமார் 05.00 மணிக்கு மேல் கோவிந்தம்மாள் தலையில் அடிபட்டு, இரத்தத்துடன் மயக்கம் போட்டு விழுந்துவிட்டதாகவும், மயக்கம் போட்டவரை வேனில் ஏற்றி, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 சேதுபதி தனது சாட்சியத்தில் 2018 ம் வருடம் ஒருநாள் மாலை 05.00 மணிக்கு தான் ஆடு ஓட்டிக்கொண்டு வந்தபோது, சத்தம் கேட்டு போய் பார்த்தபோது கோவிந்தம்மாள் படுத்திருந்ததாகவும், அவரை ராஜேந்திரனும், தாங்களும் சேர்ந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 ராஜேந்திரன் தனது சாட்சியத்தில் தங்களுக்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் இடையே மனைக்கட்டு சம்மந்தம்மாக பிரச்சனை இருந்தது என்றும், கடந்த 2018 ம் வருடம் ஒருநாள் மாலை சுமார் 05.30 மணிக்கு மேல் தான் மாடு ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வருவதற்குள் தன் மனைவி வீடு கூட்டிக்கொண்டு இருக்கும்போது, ஆஜர் எதிரிக்கும் தன் மனைவிக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்ட நிலையில், ஆஜர் எதிரி தன் மனைவியை உருட்டுக்கட்டையால் தலையில் அடித்து மண்டையை உடைத்துவிட்டு, ஆஜர் எதிரி ஓடிவிட்டார் என்றும், காயம்பட்ட தன் மனைவியை தான் மருத்துவமனையில் சேர்த்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.5 மணிகண்டன் தனது சாட்சியத்தில் 2014 ம் வருடம் ஒரு நாள் வாழைக்குறிச்சியில் உள்ள கோவிந்தம்மாள் வீட்டின் அருகில் தானும், கிருஷ்ணமூர்த்தி மகன் ராஜூவும் பேசிக்கொண்டிருந்தபோது, தா.பழூர் போலீசார் வந்து, முந்தைய நாள் வடிவேலுக்கும் கோவிந்தம்மாளுக்கும் நடந்த சண்டை தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும் ராஜூவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 தன்னுடையதுதான் என சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.6 செந்தில்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 06.01.2018 ம் தேதியன்று தான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது, இரவு சுமார் 08.30 மணியளவில், வாழைக்குறிச்சியைச் சேர்ந்த கோவிந்தம்மாள், வயது 45 என்பவரை அவரது கணவர் ராஜேந்திரன் தன்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், கோவிந்தம்மாள் தன்னை தெரிந்த 4 நபர்கள் அவரது வீட்டில் வைத்து அன்றைய தினம் மாலை சுமார் 05.00 மணியளவில், உருட்டுக்கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும், அவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து, உள்நோயாளியாக அனுமதித்தேன் என்றும், அவரை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தது என்றும், 1) சுமார் 2 –3 மணி நேரம் அளவிலான 5 செ.மீ. அளவுள்ள தையலிடப்பட்ட காயம் இடது பக்க பக்கவாட்டு மண்டையில் இருந்தது என்றும், 2) இடது பக்க தோள்பட்டையில் இரத்தக்கட்டு காணப்பட்டது என்றும், இவருக்கு தலைக்காயம் இருந்ததால், மேல்சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கபட்டார் என்றும், அங்கு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, 11.01.2018 ம் தேதியன்று விடுவிக்கப்பட்டார் என்றும், அவருக்கு அங்கு சிகிச்சையளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அ.த.சா.ஆ.3 வழங்கியுள்ளார் என்றும், அதையொட்டி தானும் அவருடைய காயங்கள் சாதாரண காயங்கள் என்று இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.4 வழங்கினேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.7 இளங்கோவன் தனது சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திருமதி.லட்சுமிபிரியா என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு தெரியும் என்றும், அவர் தற்போது இறந்துவிட்ட காரணத்தினால், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 07.01.2018 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.லட்சுமிபிரியா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலினைப் பெற்று, அங்கு சென்று, உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோவிந்தம்மாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலைய குற்ற எண் 06/2018, ச/பி.294(b), 324, 506(2) இதச

மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜி, மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 07.01.2018 ம்தேதி 10.00 மணிக்கு காரைக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து, நிலையம்கொண்டு வந்து, திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் திரு.சையதுராஜ் மற்றும் திரு.செந்தில்குமார் ஆகியோரை என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர்கள் கொடுத்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றார் என்றும், பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து, 29.03.2018 ம் தேதி எதிரியின் மீது ச/பி.294(b), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார்.

14. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

15. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

16. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

17. கடந்த 06.01.2018ம் தேதி மாலை 05.00 மணிக்கு அ.சா.1ஐ எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி, அங்கு கிடந்த உருட்டு கட்டையால் அ.சா.1ன் தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும் எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

18. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. அ.சா.1 இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளார். அ.சா.4, அ.சா.1ன் கணவர் ஆவார். கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிடப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 அரசுதரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.5 பார்வை மகசர் சாட்சி ஆவார். அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

20. எதிரி தரப்பில் அ.சா.1ன் குடும்பத்திற்கு ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பொழி பிரச்சனை சம்மந்தமாக உள்ள முன்விரோதம் காரணமாக எதிரி மீது இந்த பொய்யான புகார் கொடுக்கப்பட்டதாக வாதம் வைக்கப்பட்டுள்ளது. அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்கையில் அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் இடையே பொழி பிரச்சனை இருந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில் தனக்கும் எதிரி வீட்டிற்கும் பொழி பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வந்ததாக சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது என்பது தெரிய வருகிறது. இந்நிலையில், அ.சா.1 மற்றும் அ.சா.4ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் தனிநபர்கள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. அவ்வாறு தனிநபர் சாட்சியங்கள் மூலம் உறுதியூட்டப்படாத அ.சா.1 மற்றும் அ.சா.4ன் சாட்சியத்தை மிகவும் நுட்பமாகவும், கவனத்துடனும் பரிசீலனை செய்வது அவசியமாகிறது.

21. எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது குறித்து பரிசீலனை செய்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று எதிரி ஒரு குச்சியை எடுத்து தன் தலையிலும், இடதுபுற இடுப்பிலும் அடித்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி தன்னை உருட்டு கட்டையால் தாக்கியதாக கூறியுள்ளார். எனவே, அ.சா.1ன் சாட்சியம் அவரது புகார் வாக்குமூலத்திற்க முரண்படும் வகையில் உள்ளது. அ.சா.4 தனது சாட்சியத்தில், எதிரி தனது மனைவியை உருட்டு கட்டையால் தலையில் அடித்து மண்டையை உடைத்து விட்டு அங்கிருந்து ஒடிவிட்டார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரி தனது மனைவியை தாக்கியதாக தன்னிடம் யார் சொன்னது என்றால் அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.4 இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது. அ.சா.1ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. அவ்வாறு உள்ள நிலையில் அ.சா.1ன் சாட்சியத்தை வலுப்படுத்தும் வகையில் மருத்துவ சாட்சியம் அமைந்துள்ளதா என்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

22. அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 06.01.2018ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் கோவிந்தம்மாள் என்பவரை அவரது கணவர் ராஜேந்திரன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், அவரை தான் விசாரித்தபோது அன்றைய தினம் மாலை 05.00 மணியளவில் 4 நபர்கள் தனது வீட்டில் வைத்து தன்னை உருட்டு கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை தான் பரிசோதித்தபோது 5 செ.மீ அளவுள்ள தையல் இடப்பட்ட காயம் இடது பக்கவாட்டு மண்டையில் இருந்தது என்றும், இடது தோள்பட்டையில் இரத்தகட்டு காணப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

23. அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி மட்டுமே தன்னை குச்சியால் தாக்கியதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அ.சா.6 தனது சாட்சியத்தில் 4 நபர்கள் உருட்டு கட்டையால் அ.சா.1ஐ தாக்கியதாக சாட்சியமளித்துள்ளார். எனவே, எத்தனை நபர்கள்

அ.சா.1 ஐ தாக்கினார்கள் என்பது குறித்தும், எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பது குறித்தும் அ.சா.1 மற்றும் அ.சா.6 ன் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்படும் வகையில் உள்ளது. மேலும், காயம்பட்ட அ.சா.1 ஐ அவரது கணவரான அ.சா.4 ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். ஆனால், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை மருத்துவரான அ.சா.6 அ.சா.1 ன் தலையில் தையலிடப்பட்ட காயம் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். அவ்வாறு உள்ள நிலையில் அ.சா.1 முதலில் எந்த மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றார் என்று கூறப்படவில்லை. மேலும், அவருக்கு முதலுதவி சிகிச்சையளித்த மருத்துவரையும் விசாரிக்கவில்லை.

24. எனவே, அ.சா.1 ன் சாட்சியம் அவரது புகார் வாக்குமூலத்திற்கு முரண்படும் வகையில் உள்ளதாலும், அ.சா.1 ன் சாட்சியத்தை வலுப்படுத்தும் வகையில் அரசுதரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்காததாலும் அ.சா.1 ன் சாட்சியம் நம்பக்கூடியதாக இல்லையனெ இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. முடிவாக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழ் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரவு 248(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்ந நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

27. இவ்வழக்கின் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, அதுகுறித்து உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

**<u>அட்டவணை : –</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – கோவிந்தம்மாள்
அ.சா.2 – செல்வராஜ்
அ.சா.3 – சேதுபதி
அ.சா.4 – ராஜேந்திரன்
அ.சா.5 – மணிகண்டன்
அ.சா.6 – செந்தில்குமார்
அ.சா.7 – இளங்கோவன், காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.2 – பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்

அ.த.சா.ஆ.3 – மருத்துவ கருத்துரை படிவம்

அ.த.சா.ஆ.4 – மருத்துவ கருத்துரை படிவம்

அ.த.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.6 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.7– மாதிரி வரைபடம்

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள் </u>**: இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

**<u>குறிப்பு:</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.